திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தேவைக்குப் போதுமான அளவில்தான் கான்விக்ட் வார்டர்ஸ் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு மன உறுதியும் நம்பிக்கையும் வரவேண்டும் என்ற எண்ணத்தில்தான் அத்தகைய வார்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மேலும் நியமிக்க வேண்டுமென்றால் அது முடியாத காரியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : சிறைச்சாலைகளில் வார்டர்களுக்கு தடி கொடுக்கப்படுகிறது. சிறைக் கைதிகளை அவர்கள் அடிக்கிறார்கள். ஆகவே, கொலை செய்த கைதிகளை எப்படி அடிப்பது, அரசியல் கைதிகளை எப்படி அடிப்பது, திருடிய கைதிகளை எப்படி அடிப்பது என்று அவர்களுக்குத் தனியாகப் பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கிறதா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : அத்தகைய பயிற்சி கொடுப்பதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாமக்கல் துணை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம்.

*வினா எண். 91— திரு. கா. செங்கோடன் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நாமக்கல்லில் புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சப்–கோர்ட்டிற்கு புதியதாகக் கட்டிடம் கட்டவும்-வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறைகளை அமைத்துத் தரவும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : இல்லை ஐயா.

திரு. கா. செங்கோடன் : நாமக்கல் கோர்ட் ஏற்கனவே ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்தில்தான் இன்றையதினம் இருந்து கொண்டிருக்கிறது. இன்றையதினம் வழக்குகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. அதே போல் வழக்கறிஞர்களின் எண்ணிக்கையும் ஏறத்தாழ 500 என்றளவில் உயர்ந்திருக்கிறது. எனவே அங்கே ஒரு புதிய கட்டடம் கட்டி சிறப்பிக்க வேண்டியது அரசின் கடமை. அதே நேரத்தில் வழக்கறிஞர்களுக்கு அங்கே ஓய்வறை கட்டித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

1980 பிப்ரவரி 7]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : 500 வழக்கறிஞர்கள் நாமக்கல்லில் இருக்கிறார்கள் என்றால் அது நம்பக்கூடிய விஷயமல்ல. மேலும் சென்ற ஆண்டுதான் இந்த நீதிமன்றம் அங்கே ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பல்வேறு மாவட்டங்களில் உள்ள பெரிய நீதி மன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு நிதி வசதி இல்லை. ஆகவே இப்போது கட்டடம் கட்டுகிற உத்தேசமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் கலைக்கூடம் அமைத்தல்.

*வினா எண். 92—திரு. வே. கருணாமூர்த்தி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

வரலாற்று சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரம் பகுதியில் பல கிராமங்களில் உள்ள சிற்பங்களை சேகரித்து கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு கலைக்கூடம் (MUSEUM) அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கங்கைகொண்ட சோழபுரம் பகுதியில் செங்கமேடு என்ற இடத்தில், வரலாற்று சிறப்பும், கலைச் செறிவும் கொண்ட கலிங்கத்து சிற்பங்கள், வைரவர், வைரவி சிலைகளை தொல்பொருள் துறை எடுத்து தனியாக ஒரு கட்டிடம் எழுப்பி அதன் உள்ளே வைத்துப் பாதுகாத்து வருகிறது. அதைத் தொடர்ந்து பிற இடங்களில் உள்ள சிலைகளையும் சேமித்து பாதுகாக்கும் பணியை இவ்வாண்டு மேற்கொள்ளும். அதற்காகத் தனியாக அங்கு ஒரு கலைக்கூடம் அமைக்கப்படுமா என்பது அங்கே கிடைக்கப் பெறக் கூடிய சிற்பங்களின் எண்ணிக்கை அவைகளின் தொன்மை, வரலாற்றுச் சிறப்பு, கலைச் செறிவு போன்றவைகளைப் பொருத்து அமையும்.

நுண்படச் சுருள்களுக்கான காப்பகம்

*வினா எண். 93—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) 1978-79 ஆண்டு ஆவணக்காப்பக நுண்படச்சுருள் அறை நிறுவ, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா ?

(ஆ) காப்பகத்தில் புராதன பத்திரங்களைப் பாதுகாக்க நுட்ப பொறியாளர்களின் அபிப்பிராயம் கோரப்பட்டதா ?